இளவேனில்

ஆண்டு மலர்

1969

தென்மராட்சி இலக்கிய மன்றம்

சாவகச்சேரி

தரமானது - குணமானது

பல்வலி
வாய் நாற்றம்
முரசு கரைதல்
முதலியவியாதிகளை
போக்க வல்லது

சுவர்ணா பல்பொடி என்று கேட்டு வாங்குங்கள்

தயாரிப்பு: சுவர்ணா பொருளாதார தொழில்கள்
கண்டி வீதி - சாவகச்சேரி.

குறைந்தவிலை! சிறந்த பெறுமதி!!
தற்கால நாகரீகத்திற்கேற்ற முறையில்
ஆடவர், பெண்டீர் பிள்ளைகளுக்கும்
ஏற்ற பாதணிகள் மற்றும்
தொப்பி, சொக்ஸ்
ஆகியவைகளைப் பெற்றுக்கொள்ள
சாவகச்சேரியில் ஓர் ஸ்தாபனம்

வைரமுத்தூஸ்

இன்றே விஜயம் செய்யுங்கள்
உண்மையை உணருங்கள்
பழுதான பாதணிகள் திருத்திக்
கொடுக்கப்படும்.
ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

வைரமுத்தூஸ்
கண்டி வீதி - சாவகச்சேரி

எமது வாழ்த்துக்கள்

ஆரோக்கியவாச
வைத்தியசாலை
மட்டுவில் வடக்கு - சாவகச்சேரி

A. KUMARATHASAN
KALAIMAGAL ROAD
ARIYALAI WEST
JAFFNA

கண்ணைக்கவரும் பல அழகிய
டிசைன்களில் வண்ண வண்ண
உடைகள் தயாரிக்க
நீங்கள் விரும்பும்
பிரபல தையல் ஸ்தாபனம்:

எ.வீ.எம்.எஸ். டெயிலரிங்

உரிமையாளர்;
எ. வீ. எம் எம். சுல்தான்
கண்டி வீதி - சாவகச்சேரி

ஸ்ரீவள்ளி கபே
தபாற்கந்தோர் வீதி
சாவகச்சேரி

இந்தியாவிலிருந்து வெளிவரும்
வார மாத பத்திரிகைகள்
மற்றும்
இலக்கியப் பத்திரிகைகள்
எம்மிடம் கிடைக்கும்.

Sri Valli Cafe
POST OFFICE ROAD
CHAVAKACHCHERI.

உறுதியும் உத்தரவாதமும் உள்ள
அழகிய
தங்க வைர நகைகள்
கிடைக்குமிடம்
சிவா ஜுவலர்

ஓடர் நகைகள் குறித்த
தவணையில் செய்து
கொடுக்கப்படும்.

உரிமையாளர்:
செல்வத்துரைப்பத்தர்
தங்கராசா
381, கண்டி வீதி
சாவகச்சேரி

ஆதவன் டெக்ஸ்
E.B. 6, மார்க்கட் - சாவகச்சேரி
திருமண வைபவத்திற்குரிய
பல டிசைன்களிலுள்ள
சாறிகள்
வேட்டி-சால்வைகள்
பெற்றுக்கொள்ளலாம்.
L.S.S. பிடவைகளும்
கிடைக்கும்.
Athavan Tex
E.B. 6, Market
CHAVAKACHCHERI.

தெய்வு- Asthma, கிரந்தி – Alergi, கரப்பன் – Eczema.

உங்கள் உடலுக்கு ஒவ்வாதது - விரோதமானது எது? குளிர், பனி, மழை, கிரந்தி உணவுகள் ஆகியவற்றால் இவ்வியாதிகள் உண்டாகின்றன. இம் மூன்றும் ஒரே இனத்தைச்சேர்ந்தவைகள்.

ஆங்கில மருந்துகளான Anthisan, Prednisalone, Benadryh, Tetracyclin. போன்ற மருந்துகளை உபயோகித்து, அவ்வப்போது மட்டும் குணம்கண்டு: மீண்டும் இவ்வியாதிகள் உங்களைப் பீடிக்காதிருக்க மருந்து இல்லையா! என ஏங்கித் தவிக்கின்றீர்களா?

தொன்மைவாய்ந்த – பாரம்பரிய சித்த ஆயுள்வேத சளி எதிர்ப்பு மூலிகைகள் துளசி, தூதுவளை, கண்டங்கத்தரி, கற்பூரவள்ளி ஆடாதோடை, சிவகரந்தை அதிமதுரம், திற்பலி ஆகியவற்றாலும், தொற்று எதிர்ப்பு: (Anti Infection) மூலிகைகள் நிலபாவல், வாய்விடங்கம், கருஞ்சீரகம், கிருமிசத்துரு ஆகியவற்றாலும் தயாரிக்கப்பட்ட எமது மருந்துகள் உடனேயும் பல வருடங்கட்குப் பின்பும் வியாதி உங்களை அணுகாது நன்கு குணமடையச் செய்யும் சிறப்பு வாய்ந்தது.

எம்முடன் கலந்தாலோசியுங்கள்.

சுகவாச வைத்தியசாலை,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

ஆயுர் டாக்டர் பி. எட்வேட்
L.A.M.P. இலங்கை
M.H.H. & B. இந்தியா

கிளை: கைதடிச் சந்தி,
கைதடி.

(மாலை 5 மணி முதல் இரவு 8 மணிவரை எல்லா நாட்களிலும் வைத்தியசாலை திறந்திருக்கும்.)

- ரப்பர் சீல்
- பேனையில் பெயர் பதித்தல்
- பள்ளிக்கூட சின்னங்கள்
- மெழுகு சீல்
- பெயர் போட்டுகள்
- திறப்புக்கோர்வை விலாசங்கள்
- அரசியல் கட்சிச் சின்னங்கள்
- பரிசுப்பொருட்களில் பெயர் பதித்தல்

ஆகிய வேலைகளுக்கு

எல்லாம் இண்டஸ்றி

1/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

விளைநிலம்.

இலக்கிய அன்பர் அனைவர்க்கும் வணக்கம்;

தென்மராட்சி இலக்கிய மன்றத்தின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு மலர்கின்றது இந்த மலர். மணத்தை நுகர அனுகுமுன் ஒன்றிரண்டு குறிப்புக்களைத் தந்துதான் ஆக வேண்டியுள்ளது.

இன்று ஒன்றைச் செய்ய முன்வருவோர் சிலர் அதை நன்றென்று உளமொன்றிக் கூறுவோர் மிகச்சிலர். செய்ய முன்வந்து செயலாற்றியவர்கள் மீது பிழை பிடிக்கும் பேர் வழிகள் பலர். ஆம்; அவர்களும் இருக்கத்தான் வேண்டும். நாம் நிதானமாக நடக்க அவர்களின் கண்டனங்கள் எமக் கெல்லாம் ஊன்றுகோலாக அமையட்டும்.

தென்மராட்சிப் பகுதியில் இலக்கிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் பூரண தனித்துவ நோக்கோடுதான் உருவா னது எம் மன்றம். அத்துறையில் மன்றம் நிறைவுற முத் தமிழ் வளர்ச்சிக்கும் முறையாகப் பணிபுரிந்தது-புரிகின்றது-புரியும் என்ற பரிபூரண நம்பிக்கை எமக்குண்டு.

இவ்வாண்டு அறுவடையில் ஒருசில மணிகளே விளைந் தாலும் அவற்றின் தரம் பெரிது. தொடர்ந்தும் சிறந்த இலக்கிய அறுவடையைப் பெறும் வாய்ப்பை இலக்கிய அபி மானிகள் ஏற்படுத்தித் தருவார்கள் என உறுதியாக நம்பு கின்றோம்.

வணக்கம்.

ராஜா ஸ்ரோர்ஸ்

மார்க்கட் — சாவகச்சேரி.

ங்கட்குத் தேவையான
கலவிதமான பிடவைத்
தினுசுகளுக்கும்

விஜயம் செய்யுங்கள்

Rajah Stores

E. B. 10, Market,
CHAVAKACHCHERI.

AMBIKA DISPENSARY

Kandy Road
CHAVAKACHCHERI.

ஆங்கில மருந்து வகைகளும்
மற்றும் பால் உணவுகளும்
வைத்தியரின் ஆலோசனைப்படி
பெற்றுக்கொள்ளும் இடம்

'அம்பிகா மருந்துச் சாலை'

கண்டி வீதி
சாவகச்சேரி

சகல விதமான
கைக்கடி காரங்கள்
சுவர் மணிக்கூடுகள்
மேசை மணிக்கூடுகள்
என்பன திருத்திக் கொடுப்பதில்
சாவகச்சேரியில் முதன்மை வகிக்கும்
ஸ்தாபனம்

சாந்தி வாச் வேக்ஸ்

கண்டி வீதி
சாவகச்சேரி

கேளுங்கள் - வாங்குங்கள்

புரு மார்க்

வாணவெடிகளை

தயாரிப்பாளர்:

P. மணியம்

புரு மார்க் வாணவெடித் தொழிற்சாலை

மட்டுவில்

DEPARTMENT OF TAMIL
Head of Department:
Professor V. Chelvanayakam
B. A. [Lond.] M. A. [Anm.]

UNIVERSITY OF CEYLON
PERADENIYA
CEYLON
4 - 4 - 69

வாழ்த்து

தென்மராட்சி இலக்கிய மன்றத்தினர் கொண்டாடவிருக்கும் ஆண்டு விழாவிலே வெளிவரும் இம் மலரில் எனது வாழ்த்துச் செய்தியும் இடம் பெறுதலைத் தமிழன்பர்கள் விரும்பிக் கொண்டார்கள். போதனை மொழியாகவும் அரசியல் நிர்வாக மொழியாகவும் தமிழ் இலங்கையில் விளங்கிவரும் இந்நாளிலே அதனைப் போற்றி வளர்ப்பதில் ஈடுபட்டு உழைத்துவரும் தென்மராட்சி இலக்கிய மன்றத்தினரின் தன் முயற்சி இனிது நிறைவேற எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பதாக.

வி. செல்வநாயகம்

DEEPAM
Tamil Literary Monthly
Editor: *Naa, Parthasarathy*

Phone: *84854*
6, Nallathambi Chetty St,
Madras-2.

வாழ்த்து

தென்மராட்சி இலக்கிய மன்றம்
சாவகச்சேரி
இலங்கை

—

அன்புடையீர்,

வணக்கம். தங்கள் மன்றம் ஆண்டு நிறைவு மலர் வெளியிடுவதை அறிந்து மகிழ்ச்சி.

மலர் சிறப்படையவும் தங்கள் மன்றத்தின் முயற்சிகள் சிறந்து ஓங்கவும் தமிழ்த்தாயை வேண்டுகிறேன்.

அன்புடன் நா. பார்த்தசாரதி

வ ந. நவரத்தினம் பா. உ.

சாவகச்சேரி
10-4-69

வாழ்த்து

தென்மராட்சி இலக்கிய மன்றத்தினர் தங்கள் மன்ற ஆண்டு நிறைவு விழாவை யொட்டி மலர் வெளியிடுவதை இட்டு மகிழ்ச்சி கொள்கின்றேன்.

முத்தமிழையும் வளர்க்க அவர்கள் எடுக்கும் முயற்சிகள் பாராட்டிற்குரியன. இலக்கியம் சமுதாயத்தைப் பிரதி பலிக்கும் சாதனமாகும். எனவே இத்தகைய விழாக்கள் சமுதாய விழிப்புணர்ச்சிக்கு இன்றியமையாதனவாகும்.

விழா சிறப்புற அமையவும், அவர்களின் பணிகள் தொடர்ந்தும் நீடிக்க தமிழன்னையை வேண்டுகின்றேன்.

வ. ந. நவரத்தினம்

நம்பிக்கை நாணயம் தயமிக்க
ஸ்தாபனம்

S.R.T. ஜுவல்லறி மாட்

கண்டி ரோட்
சாவகச்சேரி



ஓடர் நகைகளுக்கு உத்தரவாதம்

உரிமை:
இ. தம்பையாப் பத்தர்

நாதன் கூல்பார்
அன்
புறுட்பலஸ்

- திறம் சர்பத் வகைளும்
- பழ வர்க்கங்களும்

எந்நேரமும் தொகையாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ளலாம்.

NATHAN COOL BAR
and
FRUIT PALACE
Market,
CHAVAKACHCHERI.

Jeevana Foto
CHAVAKACHCHERI.



உங்களை திருப்தி
செய்வதே எமது
சேவையின்
சிறந்த
நோக்கம்

ஜீவனா போட்டோ
கண்டி வீதி - சாவகச்சேரி

அரவிந்தநாதன்
டெக்ஸ்ரைல்
E.B. 5, மார்க்கட்
சாவகச்சேரி

- பலரகப்பட்ட பிடவைகள்
- ரெடிமேட் சேட் வகைகளை

எம்மிடம் நிதான விலைக்கு
பெற்றுக்கொள்ளலாம்.

ARAVINDANATHAN TEXTILE
E.B. 5, Market
CHAVAKACHCHERI.

வாழ்வு நலம் பெற.....!

ஆ. கந்தையா எம். ஏ.
(தமிழ் விரிவுரையாளர் இலங்கைப் பல்கலைக் கழகம் பேராதனை)

ஓர் இலட்சிய இல்லாள் எவ்வகை இயல்புகளுள்ளவளாக இருக்க வேண்டும்? இவ் வினாவுக்குப் பலரும் பலவாறு விடை தருவர். இலட்சிய இல்லாள் யார்? அவளின் இயல்புக ளும் பண்புகளும் எவை? இலட்சிய இல்லாள் என்று தமது சொந்த மனையாளைத்தான் வரு ணிக்கின்றார்கள்? இவ்வாறு வர்ணிப்பின் அவ்விலட்சியங்கள் அவர் மனையாளிடம் இருக்கின் றனவா? அல்லது இலட்சிய மனையாள் என்று கூறும் போது அவள் இலக்கியங்களில் வரு பவளா? காப்பியங்களில் தோன்றுபவளா? இலட்சியங்கள் என்று கூறுபவை கனவிற் காண் பவையா? அல்லது வாழ்க்கையில் உண்மையில் பெறக் கூடியனவா? என்ற பல வினாக்களுக்கு விடை காண வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

தமது இல்லாள் பெரும் பண்புள்ளவளாக இருக்கவேண்டுமென்றார் ஒருவர். அப்போது தான் தன் வாழ்வை வளம் படுத்த முடியுமென்றும், தன் ஆசைகளை நிறைவேற்ற இயலு மென்றும் அவர் கருதுகின்றார். அவரின் வாழ்க்கைக் குறிக்கோள் அது போலும்! இன்னொரு வர் தமது மனையாள் நவநாகரீகப் பெண்ணாக இருந்துவிட்டாற் போதும் என்கிறார். அவ ளோடு ஓய்யாரமாக உலாவி வரவும், உந்து வண்டியில் பவனி வரவும் அவர் உள்ளம் விழை கின்றது. வேறொருவர், வாழ்வு பண்பும் பயனுமுடையதாக அமைவதற்கு அன்பும் அறனும் உடைய மனையாளல்லவா வேண்டும் என்கிறார்? அன்பும் அறமும் மாத்திரம் போதுமா? கல் வியும் கற்பும் வேண்டாவா? என்கிறார் மற்றொருவர். இவற்றிற்கு மேலாக மனையாள் அன் பும், அழகும், கல்வியும், கற்பும், செல்வமும் சிறப்பும் நிறைந்தவளாக இருக்க வேண்டும் என்று பலர் விரும்புகின்றனர். இவ்வாறு கருத்துக்கள் வேறுபடுகின்றன. அதனால் ஆராய்ச் சிக்குரிய இலட்சிய மனையாளும் வேறுபடுகின்றாள்.

தமிழிலே அன்பு மொழி பேசி, தமிழ்ப் பண்பையே பேணி, தமிழ் நங்கையாக இருக்க வேண்டும் தம் இல்லாள் என்று தமிழ்ப் பண்பை விரும்பும் ஒருவர் விரும்புகின்றார். அன்பை யும் பண்பையும் விரும்பும் அவர், தமிழ்ப் பண்பைப் பேண வேண்டும் என்று கருதுவதில் வியப்பில்லை. ஆம் தமிழ் உள்ளம் அதைத்தான் விரும்புகிறது. பணமுள்ள இல்லாள் பண்பில் லாதவளாகி விட்டால்? வாழ்வு பயனற்றதாகிவிடும். பணம் இல்லாவிட்டால் கவலையில்லை. ஏன்? இல்லாத அப்பணத்தை, உழைத்து ஈட்டிவிட முடியும். ஆனால் பண்பு இல்லையாயின் அதனை ஈட்டிவிட முடியாது. அதனால் இழிவேயன்றி, உயர்வேயில்லை. படியாத மனையாளாக இருக்கலாம், கவலையில்லை. படியாத அவளை நல்ல அறிவுள்ளவளாக ஆக்கிவிடமுடியும். ஆனால் அவளிடம் அன்பும் பண்பும் இல்லையாயின் வாழ்வு பயனுமற்றதாகி விடும். ஆகவே இல் லாள் அன்போடு பேசி பண்போடு பழகுபவளாக அமைந்து விட்டால் அதுவே போதும்.

இல்லத்தை எழில் பெறச் செய்பவள் இல்லாள். இல்லத்தை அணி செய்கிறாள்; அழகு படுத்துகிறாள். கோலம் போடுகிறாள். குணத்தோடு பழகுகின்றாள். இல்லம் எழில்பெற, இல் வாழ்வு சிறக்கின்றது. அகமும் முகமும் மலர்ந்து கணவனை அன்போடு பேணுகின்றாள். கண வனின் குறிப்பறிந்து பேசுகின்றாள். செயலாற்றுகின்றாள். எனவே கணவன் மனைவியருக்

இடையே தெய்வீகமான ஓர் அன்பு வளர்கிறது. ஒருவரையொருவர் பிரிக்க முடியாத - மறக்க வியலாத அன்புக் கயிற்றினால் இருவரும் பிணைக்கப் படுகின்றனர். ஓர் ஆவிற்கு இரு கோடு பூத்தாற் போன்று நல் வாழ்வாக அவர்கள் வாழ்வு மலர்கிறது.

அதற்கு மனையாளின் அன்பும் அறனுமே அடிப்படைக் காரணமெனலாம். அன்பும் அறனும் என்ற அத்திவாரத்தில் எழுப்பப்படும் வாழ்க்கை என்ற மாளிகை பண்பும் பயனும் நிறைந்ததாய் அமைந்துவிடும்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" - என்றான் வள்ளுவன்.

இல்லாள் தமிழ்ப் பண்பு உள்ளவளாக அமைய வேண்டும். அச்சம் மடம், நாணம், பயிர்ப்பு என்ற பெண்களுக்கே உரிய தனிப்பண்புகளும் அவளுக்கு இன்றியமையாதன. ஆனால் "ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே" என்ற புரட்சிக் கவிஞனின் கனவையும் நனவாக்குபவளாக இருக்கவேண்டும். தமிழ்ப் பெண்களுக்கென்றே தனிப் பண்புகள் உண்டென்றேன். ஆம், கூந்தலில் மலர் சூடுவதும்; நெற்றியிலே திலகம் இடுவதும்; கண்களுக்கு மை தீட்டுவதும்; மங்கல நாண் அணிவதும் மங்கையரின் பண்பாகும்; இவற்றை இலட்சிய இல்லாள் தனக்காகச் செய்வதில்லை. தன்கணவனை மகிழ்விக்கவே மேற் கொள்கின்றாள்.

"இல்ல தென் இல்லவள் மாண்பானால்?" என்று வள்ளுவனே வினவி வியக்கின்றான். மனைவி மாண்புடையவளானால் வாழ்க்கையில் ஒருவனுக்கு இல்லாதது எதுவுமேயில்லை; ஆனால் மனைவி நற் பண்பற்றவளானால் அவனுக்கு வாழ்க்கையில் இருப்பதும் ஒன்றுமே இல்லை.

இனி தமிழ் இலக்கியத் தலைவியர்களைச் சிறிது நோக்குவாம். நற்றிணையில் வரும் நற்கையரையும் காண்கின்றோம்; குறுந்தொகைத் தலைவியையும் பார்க்கின்றோம். சிலம்பில் கண்ணகியின் கற்பும், மாதவியின் மாண்பும் நம் உள்ளத்தை ஈர்க்கின்றன.

"தாமரைத் தண்டா தூதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புகைய மன்ற புரையோர் கேண்மை"

என்று தன் தலைவனின் கேண்மையை உயர்த்திக் கூறுகின்றார் நற்றிணை நங்கை;

"இம்மை மாறி மறுமை யாயினும்
நீயாகியர் எம் கணவனை
யாகியர் நின் நெஞ்சுநேர்பவளே"

என்று தன் சட்டுக்கடங்காத காதலைக் குறுந்தொகைத் தலைவி புலப்படுத்துகிறாள்.

"போற்று ஒழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்று வள்ள வாழ்க்கையே னுதலின்
ஏற்றெழுந் தனன்"

என்று கூறும் கண்ணகியின் கற்பும்,

''கூடலும் ஊடலும் கோவலற்குக் அளித்து
பாடமை சேக்கைப் பள்ளியுள் இருந்தோள்''

என மாதவியின் ஆருக்காதலும் இலக்கியங்களில் மாத்திரமன்று. இல் வாழ்க்கைக்கு வேண்டிய இல்லாளுக்குரிய நல் இலட்சியங்களுமாகும்.

இவ்வகை இயல்புகளை எல்லாம் தமிழ் இலக்கியங்களிலே கண்டு காதல் வாழ்வின் கண்ணியத்தையும், இல்வாழ்வின் இயல்பையும் உணர்வதோடு அவற்றை எடுத்துக்கூறி இன்பம் காணும் இயல்புள்ள இல்லாளே இல்லறத்துக்கு உகந்தவளாவள்.

இல்லறத்தை இனிது நடத்துபவள் இல்லாளல்லவா? எனவே பொறுப்புணர்ச்சியும் பொறுமையும் அவளுக்கு நல்ல அணிகலன்களாகும். வரவுக்கேற்ற வாழ்க்கையை மேற்கொள்ளும் மனையாளே வாழ்க்கை என்ற சகடத்தை வளம்பெற நடாத்திச் செல்லவல்லாள். கணவனுடைய உழைப்பின் அளவை உள்ளத்தில் கொண்டு வீட்டுச்செலவுகளை மட்டுப்படுத்தி இல்லறத்தைச் செவ்வனே நடாத்தும் இல்லாளாக அவள் விளங்கவேண்டும். வறுமையில் கலங்காதும்; செல்வத்தில் செருக்குக் கொள்ளாமலும் பொறுமை என்னும் நகை அணிந்து இல்லறத்தை இனிது நடத்த வேண்டும். செலவுகளைக் கட்டுப்படுத்தி, ஆடம்பரத்தை அறவே வெறுத்து, உடையிலும் உள்ளத்திலும் எளிமை விளங்க வாழ்பவளே இலட்சிய நங்கை, அவள் வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்லவளாவாள்.

இல்லாள் அழகுடையவளாக இருக்கவேண்டும் என்று பலர் விரும்புகின்றனர். இங்கு உடல் அழகா? உள்ளத்து அழகா என்ற வினா எழுகின்றது. உடலழகிலும் உள்ளத்தழகே மேலானது. அதுவும் கொடிய வறுமையிலும் ஒன்றிவாழுகின்ற உள்ளத்தழகுடைய இல்லாளையே எல்லோரும் விரும்புவர்.

"ஒரோஒகை தம்முள் தழிஇ ஒரோ ஒகை
என்றன் கூறி ஆடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை''

என்ற இலட்சிய மனையாளை வாழ்க்கைத் துணையாகப் பெற்றுவிட வேண்டும். விருந்தினரை அன்போடு உபசரித்தல், பண்போடு பழகுதல் என்பனவும் இல்லாளுக்குரிய நற்பண்புகளாகும்.

''செல்விருந்தோம்பி வரு விருந்து பார்த்திருப்பாள்
நல் விருந்து வானத்தவர்க்கு''

என்று வள்ளுவன் விருந்தினரை இல்லாள் உபசரிக்கும் இயல்பைப் பாராட்டிப் பேசுகின்றார். உண்பதற்கு உணவில்லையே என்று இரந்துவரும் ஏழைகளுக்காக இரங்குகின்ற உள்ளமும்; மற்றவர்களின் துன்பத்துக்குக் கலங்கி வடிக்கும் கண்ணீரும் ஓர் இலட்சிய இல்லாளுக்கு இன்றியமையாதன. அகத்திலும் முகத்திலும் அன்பும், உள்ளத்திலும் உதட்டிலும் உண்மையும் உள்ள இல்லாளையே எல்லோரும் போற்றுவர்.

இல்லாளுக்குரிய இன்னொரு இயல்பையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். நல்ல உணவுகளை ஆக்குகின்ற திறன் ஒரு மனையாளுக்கு மிக மிக வேண்டியதொன்று. அன்புக் கணவனுக்கு ஆக்கின்ற உணவு பதமுள்ளதாக அமைய வேண்டு மென்று ஒருத்தி துடிதுடிக்கின்றாள். தன் பட்டுடையைக் கூடப் பொருட்படுத்தாது, உணவு பதமாக இருக்க வேண்டுமே என்று

ஆவலோடு சமைக்கின்ற அவளை இலக்கியங்களிலே காண்கின்றோம். அதேபோன்ற இலட்சிய மனையாளாக என் மனைவியும் அமைந்து விட்டால், அறு சுவை உண்டி அமர்ந்து அவள் ஊட்ட அதனைச் சுவைத்து நலம் பாராட்டும் போது அவள் முகத்திலெழும் மகிழ்ச்சியால் என் உள்ளம் பூரிப்படையும்.

ஆனால் வேலைக்காரி சமைத்துப் போட்ட அவற்றைக் கணவனுக்கும், குழந்தைகளுக்கும் பரிமாறுகின்ற மனையாள் இலட்சிய மனையாளாக முடியாது. அவ்வுணவு கணவன் மனைவியருக்கிடையே அன்பை வளர்க்காது, வெறுப்பையே வளர்க்கும்.

இல்லாள் கலையுணர்ச்சி யுள்ளவளாக இருக்க வேண்டாமா? என்று ஒருவர் கேட்கலாம். கலையுணர்ச்சி விழுமிய வாழ்க்கைக்கு வேண்டியதே! ஆடல் வேண்டுந்தான்? ஆனால் இல்வாழ்க்கையில் இறங்கிய பின்னரும் வேண்டுமா? ஆனால் பாடலும், வீணை மீட்டலும் இல்லாளுக்கு வேண்டுவன. தமிழ்ப் பாட்டுக்களை இசையோடு பாடவும் வீணையில் மீட்கவும் இல்லாள் தெரிந்திருக்கவேண்டும்.

"துன்பம் நேர்கையில் யாழ் எடுத்துநீ
இன்பஞ்சேர்க்க மாட்டாயா?"

என்ற பாடல் எவ்வளவு உண்மையானது? இவை யாவும் ஒருங்கே அமைந்த இல்லாளைப் பெற்று விட்டால், உண்மையாகவே வாழ்வு நலம் பெறும்.

VEL BROTHERS
TEXTILES MERCHANT
EB 9 Market — Chavakachcheri

பலவித பட்டு, பருத்தி, நூல்
பிடவைகளும்
றெடிமேட் உடுப்புகளும் மலிவான
விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
* உள்ளூர் கைத்தறிச் சாரி
* வேட்டி சால்வை மற்றும் பல
துணிகள் மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெறக்கூடிய ஒரே ஸ்தாபனம்

வேல் பிறதர்ஸ்
பிடவை வியாபாரம்
EB 9, மார்க்கட், சாவகச்சேரி

மன்றத்தின் மங்கள விழாவிற்கு
எமது வாழ்த்துக்கள்.

பான்சி பலஸ்
கண்டி ரோட் — சாவகச்சேரி

வீட்டுப் பாவனைப் பொருட்கள்
மின்சார உபகரணங்கள்
புத்தகங்கள் மற்றும்
சகலவித தேவைகளுக்கும்
ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

FANCY PALACE
Bus Stand
Kandy Road - CHAVAKACHCHERI

3500 ஆண்டுகளுக்கு முன்:

சிந்து வெளியில் வாழ்ந்த மக்கள் யார்?

சி. கனகசபாபதி
(ஆசிரியர், மட்டுலில் மகாவித்தியாலயம்)

1920-ம் ஆண்டில் இந்தியதொல்பொருள்ஆராய்ச்சித்துறையினர்,சேர்ஜோன் மாஷலின் தலைமையில் சிந்து வெளியில் பண்டைக்கால நாகரிகச் சின்னங்களை முதன் முதல் கண்டனர். 1922-ல் அதேதுறையில் கடமையாற்றிய ஆர்.டீ.பனஜி சில முத்திரைகளை (Seals) மொகஞ்சதரோவில் கண்டெடுத்தார். 1924 முதல் 1931 வரை தொடர்ந்து அகழ்வாராய்ச்சி செய்து தன்னுடைய கருத்துக்களை மிக விரிவாகவும் தெளிவாகவும் பல தொகுதிகளைக்கொண்ட நூல்களில் வெளியிட்டார். அங்கு வாழ்ந்த மக்களின் மண்டை ஓடு, எலும்புக்கூடு ஆகியவற்றையும் அவர்கள் உபயோகித்த கலன்கள், கருவிகள், வளர்த்த விலங்குகள், வழிபட்ட தெய்வங்கள், அமைத்த கட்டிடங்கள், குளங்கள், கிணறுகள், வடிகால்கள், நெடுஞ் சாலைகள் முதலியவற்றை ஏனைய நாடுகளில் உள்ளவற்றுடன் ஒப்பு நோக்கியபின் இங்கு வாழ்ந்தவர்கள் ஆரியர் அல்லாதவர் (non aryans) என்று முடிவு செய்தார். ஆனால் அம்மக்களின் இனம், மொழி இன்னதென்று திட்டவட்டமாகக் கூறப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை.

மாஷலுக்குப்பின் இந்திய தொல் பொருட்துறையின் தலைமை இயக்குநராகக் கடமையாற்றிய ராவ் பகதூர் கே. என். டிக்ஷிற் பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்த பின் சிந்துவெளி நாகரிகத்தை உருவாக்கிய மக்கள் திராவிடர்களாக இருக்கலாம் என்று கூறினார். ஆனால் எவ்வித ஐயமுமின்றி உறுதியாக உரைப்பதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை.

பிரித்தானிய தொல்பொருளியல் வல்லுநர் மோட்டிமர் வீலர் நவீன விஞ்ஞான சாதனங்களின் உதவியுடன் இந்தியாவிலும் பாக்கிஸ்தானிலும் அகழ்வாராய்ச்சி செய்து பல அரிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார். கி. மு. 1500 அளவில் ஆரியர்கள் இந்திய துணைக்கண்டத்துள் புகுந்தனர் என்றும் இருக்கு வேதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் போர்கள் வரலாற்று நிகழ்ச்சிகளென்றும், ஆரியருக்கும் ஆரியரல்லாதாருக்கு மிடையில் நடைபெற்றன என்றும் கூறுகிறார். இக்கூற்றை தொல்பொருள், இலக்கிய, மொழியியல் சான்றுகள்மூலம் நிருபிக்கின்றார். அகழ்ந் தெடுத்த எலும்புக் கூடுகளை ஆராய்ந்தபின் சிந்து வெளியில் பல இனத்தவர் வாழ்ந்த போதிலும் மிகப்பெரும்பாலோரின் எலும்புக் கூடுகள் ஆரியரல்லாதவர் களின் என்று தெளிவாக எடுத்துரைக்கிறார். இன்று தென்னிந்தியாவில் வாழும் மக்களை ஒத்தவர்களும் அங்கு வாழ்ந்தனர் என்று கூறுகிறார்.

"வரலாற்றுக்கு முந்திய இந்தியா" என்ற நூலை எழுதிய தொல்பொருளியல் அறிஞர் பிகற் மத்திய ஆசியாவிலும் மேற்கு ஆசியாவிலும் அகழ்வாராய்ச்சி செய்து அங்கு கிடைத்த சான்றுகள் மூலம் ஆரியர்கள் இந்தியாவினுள் புகுந்தகாலம் சுமார் கி. மு. 1500 என்று தெளிவாக விளக்குகிறார். இவர்களுடைய வருகைக்குமுன் சிந்து வெளியில் வாழ்ந்த மக்கள் ஆரியர் அல்லாதோர் என்று நிரூபிக்கின்றார்.

சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட மென்கற்களாலான முத்திரைகளிலும் தகட்டுப்பாளங்களிலும் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களைப் புரிந்துகொள்ள அறிஞர்கள் பல ஆண்டுகளாக முயன்றனர். முதன்முதல் அவ் வெழுத்துக்களின் பொருளைக் கண்டறிந்ததாக யேசு சபையைச் சேர்ந்த ஸ்பானிய அறிஞர் ஃகெரஸ் கூறினார். இவ்வெழுத்துக்களைப் படித்தறியும் முயற்சியில் 18 ஆண்டுகள் ஈடுபட்டு இந்த லிபியில் எழுதப்பட்டிருக்கும் மொழி ஆதிதிராவிட மொழியென்று முடிவு செய்தார். ஆய்வின் விவரங்களை நூல்வடிவில் மூன்று தொகுதிகளாக அச்சேற்றத் திட்டமிட்டிருந்தார். ஆனல் முதற் தொகுதி வெளிவந்தபின்னர் ஃகெரஸ் அடிகள் இறந்தார். விவரங்கள் முழுவதும் வெளிவராததால் வரலாற்று அறிஞர்கள் அவருடைய முடிவுகளை ஏற்கத் தயங்கினர்.

சில மாதங்களுக்கு முன் சோவியத் நாட்டு அறிஞர்கள், பேராசிரியர் வை. கொனரசோவ் தலைமையில் சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட புராதன எழுத்துகளை ஆராய்ந்து அவை திராவிட மொழியின் முந்தைய வடிவமென்று முடிவு செய்தனர். சோவியத் நாடிலுள்ள இனஇயல் கழகத்தின் நிறுவனம் இவ் வாராய்ச்சியின் விவரங்களை ஆங்கிலத்திலும் ருஷ்ஷிய மொழியிலும் வெளியிட்டிருக்கின்றது.

இவர்களுடன் எவ்வித தொடர்புமின்றி ஆசியநாட்டு ஆராச்சியில் ஈடுபட்டிருந்த ஸ்கந்திநேவிய நிறுவனம் கொப்பனேகனிலிருந்து 17-1-69 ல் ஓர் முக்கிய செய்தியை வெளியிட்டது. "சிந்து வெளி எழுத்துக்கள் ஆதி திராவிட மொழி எழுத்துக்கள்" என்ற தலைப்பின் கீழ் இச் சிறப்பு வெளியீட்டின் முதற்பகுதி அச்சேற்றப்பட்டது. இவ்வாராய்ச்சியில் ஈடுபட்ட நான்கு பின்லாந்து அறிஞருள் மூவர் மொழியியல் வல்லுநர் ஒருவர் கணக்கியல் புள்ளியியல் மேதை. கணக்கிடும் பொறியின் உதவியுடன் அஸ்கோபர்பொலவும் ஏனைய மூவரும் இம்முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டனர். இவர்களின் ஆராச்சிக் கட்டுரை 70 பக்கங்களைக் கொண்டது. பல கல்வெட்டுக்களின் பொருளைத் தெளிவாகப்புரிந்து கொண்டனர். கண்டறிந்த பல சொற்கள் இன்றைய திராவிடச் சொற்களே. அவற்றுட் சில தொழிலாளி, உழவன், எழுத்தர், பூசகர், வாணிகன், அறிஞன், குயவன்.

இவ்வாரய்ச்சியின் விவரங்கள் வெளிவந்தபின் சிந்து வெளியில் வாழ்ந்த மக்கள் திராவிடர்கள் என்பது தெளிவாகும்.

***

சாத்திரி யார்?.....

இ. சிவானந்தன்.

அரசடியிற் சாத்திரியார் ஆறுமுகம் பேரவர்க்கு
அதிகாலை முகங்கழுவி ஆகாரம் முடித்தவுடன்
பஞ்சாங்கம் பார்ப்பதுவே பகற்போது வேலையெனப்
பாயைவிரித் தங்கேயோர் பட்டடையே போட்டிடுவார்.

கைக்குளடங் காதவொரு கட்டை 'இலைப் பென்சில்'
சாதகக் கட்டுகளும் சாத்திரப் புத்தகமும்
இலக்கினங்கள் இராசி யோகமென ஏதேதோ
அச்சடித்த புத்தகங்கள் அஞ்சாறும் அங்குண்டு.

இவற்றுடனே இந்தாளும் இன்றைக்கு நேற்றல்ல
இற்றைக்கு இருபத்தி ஏழாண்டு காலமுமாய்
கூதல் பனி.வேர்வை, கோடை,மழை பாராமல்
ஆவல் மிகுந்துவர ஆராய்ச்சி பண்ணுகிறார்.

எடுத்த எடுப்பினிலே இவர்சொன்ன இரண்டொன்று
பொறுத்த விஷயங்கள் பூரணமாய்ப் போனதனால்
விருப்புடனே ஊர்மக்கள் போய்இவரை மொய்த்திடவே
பொய்யாது செய்கைகளை மெய்யாக்க லானார்கள்.

பொறுப்புடனே தம்வேலை செய்தறியா மக்களெலாம்
போகின்றார் அவரிடத்தே போனவரோ எல்லாரும்,
விருப்புடனே அவர்கூறும் எதிர்காலம் உளமேற்று
அதன்படியே ஒழுகுதற்கும் அடிகோலு கின்றார்கள்.

இவற்றினிலே ஏதேனும் பிழைபாடு நேர்ந்துவிடின்
கிரகத்தின் கோளாறு கவனமென எச்சரித்துச்
சிரித்து மழுப்பாது சிற்றத்தோ டுருப்பட்டுச்
சில்லறையும் வெற்றிலையும் சிலநோட்டும் சேகரிப்பார்.

★

வெள்ளி

முருகையன்

அறியாப் பராயம்: ஐந்து வயது!
சுற்று முற்றும் சொற்கள் காற்றிலே
பறந்து திரிந்தன; பார்த்தேன் — அவையெலாம்
அழுக்குப் படிந்தன என்ரூர்,
அரிவரி வகுப்பின் ஆசான் அவர்களே.

சுத்தமாக்கும் உபாயம் பலப்பல
சொல்லித் தந்தார், பள்ளி வாத்தியார்.
காலப் போக்கிலே சொற்களின் அழுக்கினை
நீக்கலில் நான் ஒரு நிபுணன் ஆயினேன்.
தொல்காப்பியர் ஒரு சோப்பும் தந்தார்.
செந்தமிழ் எனதெனச் செருக்கி,
சோப்புப் போட்டுச் சொற்களைக் கழுவினேன்.

கழுவிய சொற்களின் ஈரம் துடைத்துப்
பவுடர் போட்டு, மேனி மினுக்கினேன்.
சொற்களை ஒருங்கே கொட்டிக் கலக்கிக்
குலுக்கிப் பார்த்தேன்; முன்போற் கிடந்தன.
ஆறிய கஞ்சியுள் அமிழ்ந்து கீழ் இறங்கிய
சோறு போலச் சோர்ந்து கிடந்தன.
சொற்களின் சோர்வினுல் யானும்
பத்து மடங்கு சோர்வடைந்தேனே.

மீண்டும் என்னுள் வேகம் பிறந்தது.
படைப்புத் தொழிலிற் பரிசோதனைகள்
செய்யும் வேட்கை சீறி எழுந்தது.
சோப்பினைத் தூக்கித் தூர வீசினேன்.
சகதியிற் கிடந்த தனித்தனிச் சொற்களைப்
பொறுக்கி எடுத்தேன்; போட்டேன் குப்பியுள்.

மனிதர்வாய்ப் பட்ட வார்த்தைகள் அவைகள்.
பொதுமகன், பொதுமகள் எச்சிலும், அந்தக்
குப்பியுட் கிடந்து குழம்பலாயின.
சொற்களை ஒருங்கே தொகுத்துக் கலக்கவும்,
'சுர்ர் எனும் ஓசை தோற்றம் பெற்றது.
நுரைத்தது கலவை; புகைத்தது பிறகு.
சூடு பிடித்தது; சூழல் ஒளிர்ந்தது.
உள்ளுணர்வுகளை ஆகுதி ஆக்கினேன்.
சக்தி பிறந்தது; தரிசனம் கொடுத்தது.
உயிர்ப்பண்புடைய கலைகள் உதித்தன.
அறியாப் பராயம் அகன்றது.
திறமை—முதிர்ச்சிச் செறிவு தெளிந்ததே.

இலக்கியமும் சமுதாயமும்

இலக்கியம், சமுதாயத்தை அடித்தளமாகக் கொண்டது. ஒவ்வொரு சமுதாயமும் தமக்கென்றே சிறப்பியல்புகளைப் படைக்கின்றது. அவை தாங்கள் தோன்றிய காலத்தின் முத்திரையைத் தாங்கி நிற்கின்றன. அவற்றுள் பொதிந்து கிடக்கும் கருத்துக்களில் சில கால மாறுதலால் காலாவதியாகிவிடும்; சில செழுமை பெற்று வளரும். வளரும் இலக்கிய மரபுகளை மேற் கொண்டு, தேய்ந்து விட்டவற்றை ஒதுக்கி விட்டு தற்கால இலக்கியத்தை நாம் வளர்த்துச் செல்ல வேண்டும்.

நா. வானமாமலை M.A.L.D.

அமரத்துவம்

— வே. குமாரசாமி —

கல்லொன் றெடுத்தான்
கனமான சிந்தனையில்
புல்லை எடுத்ததற்
பொழியத் தொடங்கினன்
சொல்லைப் பிழிந்து
சுவைக்கத் தமிழ்செய்யும்
வல்ல கவிஞன்போல்
வட்டுறுப் பற்றகல்லை
மெல்லத் தடவி
மெருகு குறையாமல்
கல்லுளியை வைத்துக்
கடைந்தும் உயிர்ப்பொன்றைச்
செல்லவைத் துள்ளே;
சிறுபொடி கண் உட்சென்று
கொல்லும் அளவிற்
கொடுமை பலசெய்தும்,

ஓயான், உறங்கான்
உளியின் நுனிவிழியின்
சாயல் வழியே
தளர்ந்து நடைபோட
காயம் பலஉடலிற்
கண்டு செழுங்குருதி
பாய, மனங்கலங்கான்
பக்குவம் தப்பாமல்
தேயும் உணர்வைத்
துடிக்கும் அழகெழிலைத்
தூய நினைவோடும்
தொட்டே வளர்த்துகிறான்;
மாயச் செயலால்
மனதைக் கவராமல்
ஆய கலையின்
அமரத்து வச்சுடரால்

ஆடா மயிலை,
அசையாத ஓவியத்தை
பாடாக் குயிலை,
பவளத்தின் துண்டிரண்டைத்
தேட முடியாச்
செழுக்குற்ற மார்புகளை
ஊட நினைக்கா
ஒருமனத்தை ஆக்கிவிட்டு
ஓடிப் பறக்கும்
கருவண் டிரண்டினை, விற்
கோடிக்குட் தேடிக்
குடையத் தொடங்கினன்
வாடா மலரை;
இளமுள்ளம் வாடவைக்கும்
பேடதற்கு வேறு
குறையேது?... கண்மலர்ந்தால்...?

உற்றுற்றுப் பார்த்தாள்
உளத்தையே தீண்டிவிட்டாள்
முற்றிக் கனிந்த
கலையின் முழு உருவைப்
பெற்ற களிப்பு
வெறியிற் பிதற்றும் அவன்
சிற்றுளியை விண்ணிற்
செயல்மறந்து வீசி, அது
நெற்றியிலே மீண்டு
விழவும், நெடுங்காயம்
உற்றான்; குருதி
உமிழ்ந்து சரிந்துவிட்டான்
சற்றைப் பொழுதிற்
சவமாய்ப், புகழ் என்று
பெற்றதோர் மாளாப் பிறப்பு.

—★—

சிறுகதை:

காலங்கடந்தபின்.....

மட்டுவிலான்

திடீரென்று விழித்துக் கொண்டான் சந்திரன். இரவின் அமைதி; நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு எழுந்த சுவர்க் கடிகாரத்தின் ஓசை காதைக் குடைந்தது. பக்கத்தே பார்த்தான் இந்திராவைக் காணோம். அவனே அறியாமலே அவன் நித்திரை வசப்பட்ட பின்னர் அவள் எழுந்து சென்றிருக்க வேண்டும்.

திடீரென்று அன்றிரவு இந்திரா 'புதிதாகப் பிறந்து' விட்டாள். சில மணித்தியாலங்களின் முன் அவன் தொட்டனுபவித்த பெண் உண்மையாகவே அவனது மனைவி இந்திராதானா?..... இந்திராவேதானா?..... அவனால் நம்பமுடியவில்லை; நம்பாமலிருக்கவும் முடியவில்லை.

டங், டங், டங், டங்... கடிகாரம் நான்கு தடவை அடித்து ஓய்ந்தது. தூரத்தில்எங்கோ ஒரு நாயின் ஊளைச்சத்தம்; சேவல் ஒன்று கூவியது. நடந்ததை நினைக்கச் சந்திரனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. திறந்திருந்த யன்னலூடாக நட்சத்திரங்கள் கண் சிமிட்டின. அதிகாலைப் பனிக்காற்று உடலை ஊசியாகக் குத்திற்று. இப்போதெல்லாம் பனி அதிகமா அல்லது குடி அவனது நரம்புகளைத் தளர்ச்சி அடையச் செய்துவிட்டதா என்பது அவனுக்குப் புரிவதில்லை.

இரவு நடந்த காட்சி மீண்டும் மனத்திரையில் தோன்றி மறைந்தது. போதையில் இருந்ததால் அவனது அறிவு மயங்கியிருந்ததா?..... அல்லது அவன் ஏதும் பயங்கரக் கனவு கண்டு விழித்திருக்கிறானா? ஒரே கலக்கம்; ஒன்றும் புரியவில்லை.

இல்லை! இல்லை! இரவு அவனுக்கு அவ்வளவு போதை இல்லை. எல்லாமே அவன் நினைவில் தெளிவாக இருந்தன. முதல் தடவையாக அவளது முழு அழகையும் கண்ட காட்சி அவன் கண்களை விட்டு அகல மறுத்தது. வெள்ளை வெளேரென்று..... ஆ! அவளும்தான் எவ்வளவு அழகு; இவ்வளவு நாளும் அவன் குருடனாக இருந்து விட்டானே?

திடீரென்று அவன் சினமடைந்தான் கை முஷ்டியால் கட்டிலில் ஓங்கிக் குத்தினான்; பற்களை நற நறவென்று கடித்தான்.

அவன் தோற்றுவிட்டான்.

ஆம், அவன் தோற்றுத்தான் விட்டான்; அதுவும் அவளுக்கு; யாரை இத்தனை நாள் அலட்சியம் செய்தானோ அவளுக்கு.

சந்திரன் எந்தப் பெண்ணுக்குப் பின்னாலும் ஓடக்கூடியவன்தான்: அவனது செக்கச் சிவந்த மேனியும், உருண்டு திரண்ட மார்பும் தோள்களும், ஆணழகன் போட்டியில் கலந்து கொள்ளக்கூடிய உடல் வாகும், அவன் தலையை ஆட்டும் போதெல்லாம் அதே அளவு அலட்சியத்துடன் நெற்றிமீது வந்துவிழும் கரிய சுருண்ட தலைமயிரும் பளீரென்று ஒளி விடும் ஒழுங்கான பற்களும் பெண்களை அவனிடம் ஓடி வரச்செய்ததிலும் ஆச்சரியமில்லை. ஆனால் அவனுக்கு இந்திராவை மட்டும் வேண்டாம்.

இரவு நிகழ்ச்சிகள் அவனதுகண்முன் நர்த்தனமாடின. முதல் தடவையாக அவனுடைய அணைப்பில் அவள் கிடந்திருக்கிறாள். அவர்களது ஓராண்டு மண வாழ்க்கையிலே இரண்டு மூன்று தடவைகள் அவளுக்குக் காய்ச்சல் கண்டபோது கூட அவன் அவளைத் தொட்டுப் பார்த்ததில்லை.

திருமண தினத்தன்று ''அவளது கைத்த லம்பற்றிய'' ஞாபகம். பின்னரெல்லாம் எப் பொழுதாவது ஏதாவது பொருட்கள் கை பரிமாறிய போதோ அல்லது போதை சற் றுக் கூடி விடுகிற சமயங்களில் அவள் அவ னைப்பற்றிவந்து படுக்கையில் விட்டபோதோ தான் ஒருவரின் ஸ்பரிசத்தை மற்றவர் உணர்ந்திருக்கிறார்கள்.

டங்! மணி நாலரை.

சந்திரனது மண்டையில் படிப்படி நன்றாகத் தான் ஏறியது. ஜீ. சீ. ஈ., யும் நன்றாகத்தான் சித்தி எய்தினன். 'நல்ல' நண்பர்கள் சகவா சம்; கேட்கவாவேண்டும், கெட்ட பழக்கங் களுக்கு. தகப்பன் சம்பாதித்த சொத்து இரண்டு தலைமுறைக்கும் போதும். பதி னெட்டு வயதுக்குள்ளேயே கெட்ட பழக்கங் கள் அத்தனையும் அவனை அண்டி விட்டன. பீடியிலே தொடங்கிய பழக்கம் மதுவிலும் மங்கையிலும் வந்து முடிந்தது.

சந்திரனின் கெட்ட பழக்கங்கள் நகப்பு றுக்கும் தெரிந்தவைதான். இருந்தும் அவ ரது துணிக்கடைகளுள் ஒன்றை நடத்தும் பொறுப்பையும் அவனிடம் விட்டிருந்தார். பொறுப்புணர்ச்சி ஓரளவுக்கு அவனைத் திருத் தும் என்று அவர் கணக்குப்போட்டார்.

சந்திரனுக்கு அங்கே 'வாய்ப்புக்கள்' பெருகின. பெண்கள் வந்து துணிகள் பொறுக் கினர்; அவன் தனக்குத் தேவையான பெண் களைப் பொறுக்கிக் கொண்டான். பெண்களி லும் பொறுக்கப்படக் கூடியவர்கள் உள்ள னர் என்பதைப் பட்டின வாழ்க்கை அவனுக் குக் கற்பித்துக் கொடுத்திருந்தது.

அழகாக வருபவர்கள், அழகுக்கு மேலும் அழகைப் பூசுபவர்கள், வார்த்தைகளிலும் அழகைத் தவழ விடுபவர்கள், குரலிலே தேன் கலந்து தருபவர்களது உள்ளங்களிலே துளி அழகில்லாமை அவனுள்ளத்தைச் சிறிதும் உறுத்தவில்லை. அவனுக்கு வேண்டியதெல் லாம் அவர்களது அழகு; அந்த அழகுகளை அவன் ஆள வேண்டும்; அவ்வளவுதான்,

சுவர்க் கடிகாரம் ஐந்து தடவை அடித்து ஓய்ந்தது.

தொடர்ந்து டக்... டக்... டக்... டக்..., அவனது மனம் தோல்வியை ஏற்க மறுத்தது. கணத்துக்குக் கணம் கோபம் அதி கரித்துக்கொண்டே வந்தது. ஓலமிட்ட அவனது மனத்தின் பிரதிபலிப்பைப் போல 'மெயில்' வண்டியின் ஓசை தூரத்தெழுந்து மறைந்தது.

'வேண்டாப் பெண்டாட்டி கைபட்டால் குற்றம்; கால்பட்டால் குற்றம்' என்ற கூற் றுக்கு இலக்கணமாக இதுவரை வாழ்ந்து வந்தவனுக்கு..... அவனால் நினைக்கவே முடி யவில்லை. அவனுடைய திருமணமே அவனைப் பொறுத்தவரை ஒரு துர்க்கனவுதான். அது நடந்ததே ஒரு கதை.

ஓர் இரவு ஒரு 'கொடி' அவன்மீது படர விரும்பியது. இரவு வந்தது; அவனும் போனான். கொடி படர வேண்டிய வேளையில் வரமுடியாதவர்கள் என்று அவனும் அவளும் எதிர்பார்த்திருந்தவர்கள்வந்துவிடவே ஆபத் தில் அகப்பட்டவள் போலக் குரலெழுப்பி அவள் தனது 'கற்பை' நிலைநாட்டிக்கொண் டாள். இவன் தன் பங்குக்கு ஓடவேண்டிய தாயிற்று. உடலைக் கிழித்த முள் வேலியை வெற்றிகரமாகத் தாண்டி, பின்னிருந்து வந்த கல்லையும் வீரத்தோடு ஏற்று உதிரம் ஒழுக அவன் பறந்தான்.

அவனருகே ஒரு கார் கிரீச்சிட்டு நின்றது.

'ஏறடா'.....அதிகாரக் குரல் ஒன்று எழுந்தது.

அவன் ஏறினான். வீடு போய்ச் சேரும் வரை தந்தையும் மகனும் ஒன்றுமே பேசிக் கொள்ளவில்லை. அவன் கூனிக் குறுகி அமர்ந் திருந்தான். இறங்கியதுதான் தாமதம். அவன் மீது பாய்ந்தார் தகப்பனார். அவரது கை கால்கள் சளைக்கும்வரை அவனது உடம்பிலே அங்கிங்கென்றில்லாதபடி எங்கும் அடிகள் விழுந்தன. கணவனை என்றைக்குமே அவ்வ ளவு கோபாவேசமாகக் கண்டிராத சந்திர

னின் தாயார் ஓரிடத்திலே குந்திப்பிடித்த படி நடந்தது அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

மறுநாட் காலை அவனைக் கண்டதுமே அவர் சிறிவிழுந்தார். 'ஏனடா நீ ஆடுற கூத்தெல்லாம் எனகருத் தெரியாதெண்டு நினைச்சுக் கொண்டிருக்கிறியோ?'

... ...

'ஒழுங்காய் இருக்கிறதெண்டால் இந்த வீட்டிலை இருக்கலாம். எல்லாட்டி இப்பவே வெளிக்கிட்டிடு.'

... ...

''உனக்கு அவள் இந்திராவை முடிச்சு வைக்கலாமெண்டிருக்கிறேன்.'' அப்படிச் செய்தாலாவது அவன் திருந்தக்கூடும் என்று ஒருவித தப்பாசை. ஒரே மகனல்லவா?

சந்திரனின் எதிர் வார்த்தைகள் எதுவுமே எடுபடவில்லை. இந்திராவை மணக்க உடன்படாவிட்டால் அவன் அன்றே கடையைவிட்டு வெளியேறிவிட வேண்டும். அவனுடைய சொத்தில் ஒரு 'வெள்ளைச்சல்லி'யும் கிடையாது. என்று தீர்க்கமாகக் கூறிவிட்டார் சந்திரனின் தகப்பனர்.

சுகபோகங்களைத் துறப்பதிலும் பார்க்க திருமணத்துக்கு இசைவது உத்தமம் எனத் தோன்றியது அவனுக்கு.

டங், மணி ஐந்தரை.

இந்திரா வழக்கமாக அதிகாலையிலேயே துயில் எழுந்து விடுவாள். அவன் சிலவேளைகளில் கண்விழித்த நேரங்களில் ஐந்தரை மணிக்கே அடுப்பெரிவதைக் கண்டிருக்கிறான். இன்று சமையலறையில் ஆள் அரவத்தையே காணோம்.

''கனவு காலுமுளைக்கும், கனவு; அவளை முறிச்சு விடுறன்'' என்று மனங்கினான். இருவரும் வேறு வேறு அறைகளில் துயில்வதுதான் வழக்கம். இரவுதான்... அவளை... அவளை... அவளை... மனம் கொதித்தது.

வலுக்கட்டாயமாக இந்திராவை அவனுக்கு மணஞ் செய்து கொடுத்ததால் சந்திரனுக்கு அவள் மீது ஒரே வெறுப்பு. தனது தகப்பனர் மீது காட்ட வேண்டிய வெறுப்பை ஒரு பாவமும் அறியாத இந்திராமீது காட்டி வந்தான் அவன்.

இந்திரா சந்திரனது தகப்பனாரது தமக்கையின் மகள். ஏழைக் குடும்பம்; தகப்பனாரது உடல் தளர்ந்து விட்டது. தமையன் ஒருவன்; அவன் சங்கக்கடை முன்றில் விற்பனையாளனாக வேலைசெய்து மாதாமாதம் உழைக்கும் அறுபதோ எழுபதோ ரூபாவில் தான் குடும்பம் நடத்தவேண்டியிருந்தது. இந்திரா எஸ். எஸ். சி. சித்தி எய்தியிருந்தாள். தையல் வேலையிலும், அயல் வீட்டுப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதிலும் அவளும் சிறிது சம்பாதித்துவந்தாள். சந்திரனின் தகப்பனாரும் அவ்வப்போது உதவிவந்தார்.

இந்திரா போன்ற ஒரு சிறந்த பெண் எப்படியும் சந்திரனைத் திருத்தி விடக்கூடும் என்ற எண்ணத்திலேயே அவளைப் பெண் கேட்டிருந்தார் சந்திரனின் தகப்பனர். சந்திரனைப்பற்றி முற்றுகத் தெரிந்திராத காரணத்தால் இந்திரா எத்தனையோ இனிய கற்பனைகளுடன் கணவன் வீடு புகுந்தாள்.

ஆனால் நடந்ததோ வேறு. தம்பதிகட் கிடையில் எப்போதுமே பிணக்குத்தான். எடுத்ததற்கெல்லாம் திட்டும் அடியும்; ஏழ்மையில் வாழ்ந்தாலும் அவள் செல்லப்பிள்ளையாக வளர்ந்தவள். ஆகவே ஆரம்பத்தில் அவளும் கோபித்துக் கொண்டு பிறந்த வீட்டுக்கு ஓடிவிடுவாள். தமையனது சொற்ப வருமானத்தில் - அவனும் இப்போது பெண்டாட்டிக் காரன் - அவளையும் பராமரிப்பதென்பது சாமானியமான செயலா, என்ன? அவள் மீண்டும் மீண்டும் கணவனிடமே திரும்பிவரவேண்டியிருந்தது. திரும்பிவந்தவுடன் வட்டியும் முதலுமாக கிடைக்கும். ஆனால் நாளடைவில் அவள் இந்த வாழ்க்கை முறைக்குத் தன்னைப் பழக்கப் படுத்திக்கொண்டாள்.

அப்படிப்பட்ட இந்திராவா இராத்திரி...

இரவுநடந்தகாட்சி அவன் கண்முன் விரிந்தது. இரவு அவன் - சிறிது போதையோடு தான்-வந்தபோது, வழக்கமாக அவன் படுத்ததும் வெளியேறிவிடுபவள் கதவைத் தாழிட்டுவிட்டு அவன் அருகே வந்து நின்றுள்.

திரும்பிப் பார்த்தான் கண்ட காட்சி..... அவன் பார்த்த சில ஆங்கிலப் படங்களிலே வருகிற பெண்கள் போல..... அரைகுறையாக... அவன் வியப்பிலிருந்து விடுபடுவதற்கு முன்னரே அவள் அவனை இறுகத் தழுவிக் கொண்டாள். கோபம் அவனை ஆட்கொள்ளுமுன்னரே உணர்ச்சி அவனை ஆட்கொண்டது. அவன் பலம் இழந்தான்.

டங்...டங்...டங்... மணி ஆறு.

எங்கோ பாயவேண்டிய பூனை இலக்குத் தவறி சந்திரன்மீது விழுந்தது. அவனுடைய கோபம் பூனை மீதுதிரும்பவே அது 'ஸ்' என்று அலறிக்கொண்டு ஓடியது.

பிள்ளையார் கோவில் மணி ஒசை எழுந்த நாத அலைகள் அவனுடைய அறையுள் பரவின. ''அப்பனே, பிள்ளையாரே'' என்று அவனை அறியாமலே அவனதுவாய் முனகிற்று.

திடீரென்று அவனது சிந்தனை வேறுதிசையில் திரும்பிற்று. இரவு அவனுடைய இடத்தில் வேறு யாராவது இருந்திருந்தால்..... அவனுக்குத் தெரிந்த எத்தனையோ பெண்களைப் போல அவளும் பெண்மையை இழந்திருந்தால் ..? அவளுடைய உணர்ச்சிகளுக்கு அவன் மதிப்பளிக்காத போதும், தவறும் வாய்ப்புக்கள் எத்தனையோ அவளுக்கிருந்தும், உடலின் தேவைகளுக்குத் தவருன வகையில் தீனிபோட முயலாது பெண்மையைக்காத்த அவள் உள்ளம் எவ்வளவு பெரியது.

சரேலென்று படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான் சந்திரன். இப்போதுதான் அவனுக்கு இந்திராவின் அருமை விளங்கிற்று.

அவள்தான் என்ன தவறு இழைத்திருக்கிறாள்? ஒன்றுமில்லையே. மனைவி என்ற உரிமையை அவள் நிலைநாட்டியிருக்கிறாள். அவ்வளவுதான்.

அவனது கோபம் போன இடம் தெரியவில்லை. இந்திரா என்ன செய்கிறாள் என்று பார்க்கும் ஆவல் மீதூர அவன் படுக்கையை விட்டிறங்கி மெதுவாக அவளது அறையை நோக்கி நடந்தான். அறைக் கதவு பரக்கத் திறந்து கிடந்தது.

அறை வாயிலில் நின்று பார்த்தான். ஒரு பெரிய பூமாலையைக் கிடத்திவிட்டாற் போல அழகே உருவாக அவள் கிடந்தாள். சிலகணங்கள் அப்படியே நின்று வாழ் நாளில் முதல் தடவையாக - அவளது அழகைப்பருகினான். பிறகு மெதுவாக அடிமேல் அடி வைத்து, நெஞ்சு திக், திக் என்று அடிக்க அவளருகே சென்றான். தனது குரலிலே கனிவைத் திரட்டி 'இந்திரா' என்று அழைத்தான். காலங் காலமாக இந்த அழைப்பை எதிர்பார்த்து ஏமாற்றத்தால் அவளதுகாதுகள் மரத்துப்போய்விட்டனவோ என்னவோ அவள் காதில் அவனது அழைப்பு விழவே இல்லை. மீண்டும் அழைத்தவன் அவளது கையைத் தூக்கினான். அது சில்லிட்டுப்போய் இருந்தது. விட்டதும் துவண்டு விழுந்தது. தலைமாட்டிலே தூக்க மாத்திரைப் போத்தல் ஒன்று காணப்பட்டது.

அவள் அவனை ஏமாற்றிவிட்டாள் அவளுடைய முகத்தில் உரிமையை நிலைநாட்டி விட்ட திருப்தி நிலவினாற்போல் பட்டது அவனுக்கு. அவனுடன் வாழ்ந்த ஒருநாள்வாழ்வு அவளுக்குப்போதும்; அவள் போய்விட்டாள்;

ஆனால் அவனுக்கு?—

ஒரு மிடறு அமிழ்தம் உண்டவன் அடுத்த மிடறு உண்பதற்கிடையிலேயே கலசம் உடைந்து சிதறிவிட்டது. இந்திராவைப் பார்த்தவாறு செயலற்றவனாக நின்றுகொண்டிருந்தான் சந்திரன்.

—oo—

எங்கள் மன்றம்



எமது பாதுகாவலர்கள்

திரு. வ. ந. நவரத்தினம்
பாராளுமன்ற உறுப்பினர்

திரு. சி. பொ. மயில்வாகனம்
வழக்கறிஞர்

திரு. இ. சிதம்பரப்பிள்ளை
காரியாதிகாரி

திரு. சு. கனகரத்தினம்
நகரசபைத் தலைவர்

நினைவுச் சுவடுகள்: ★★★★

பூத்துக் குலுங்கும் இவ் இளவேனிற் காலத்தில் எமது மன்றம் தனது ஆண்டு நிறைவு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடும் இவ் வேளையில் இதன் கடந்த காலச் சேவையினை நினைவு கூர்தல் சாலச் சிறந்தது.

சென்ற ஆண்டில், எமது மன்றம் தரத்தில் குறையாத சேவையினை அளித்துள்ளது. இலக்கிய விழாவினையும், பாரதி விழாவினையும் சிறந்த முறையில் கொண்டாடியது. மேலும் வளர்ந்தோர் கல்வி நிலையத்தவருடன் 'இணைந்து' திருவள்ளுவர் விழாவினையும் சிறப்புற நடத்தியது. இவ்விழாக்களில், ஈழத்தின் முன்னணி இலக்கிய கர்த்தாக்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் இவ் விழாக்களிடை எமதுமன்றம் சுத்தானந்தபாரதியாரையும் அழைத்து சொற்பொழிவாற்றச் செய்தது.

பல வகையிலும் சிறப்புப்பெற்று விளங்கும் எமது தொகுதியில், பயன்தரும் பொது சன நூல் நிலையம் ஒன்று இன்னும் நிறுவப்படாதமை வேதனைக்குரியது. இப் பின்தங்கிய நிலை தொடர்ந்தும் நீடிக்கக்கூடாதென்ற உளப்பாங்குடன், முன்னாள் கௌரவ உள்ளூராட்சி மந்திரி மு. திருச்செல்வம் அவர்கள் இங்கு வருகைதந்தபோது, எமது பாராளுமன்ற உறுப்பினரதும், நகரசபைத் தலைவரினதும் அனுசரணையுடன் பொதுசன நூல் நிலையம் ஒன்று நிறுவப்பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தோம். பின்னர் உள்ளூராட்சி அமைச்சு நூல் நிலையக் கட்டிடத்திற்கென 10 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கியதென அறிகிறோம். ஆயினும், இன்னும் பொது சன நூல் நிலையக் கட்டிடவேலைகள் ஆரம்பிக்கப்படாதமை கவலைக்குரியதொன்றாகும்.

மேலும், தற்போதைய நகரசபை வாசிகசாலையில் பத்திரிகைகள் ஒழுங்காக இடம் பெறவும், தினப் பத்திரிகைகளுடன், வார, மாத சஞ்சிகைகளும் நகரசபை வாசிகசாலையில் இடம்பெற வேண்டும் என்பதனைப் பல முறையிலும் வற்புறுத்தி வந்திருக்கின்றோம். எமது வேண்டுகோட்களில் சில நிறைவேற்றப்பட்டமையையும்காண்கின்றோம்.

ஈழம் தந்த தமிழ்ப் பெருமகனார், பேராசிரியர் கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்களின் மறைவு குறித்தும், அறிஞர் அண்ணா அவர்களின் அகால மரணம் குறித்தும், எமது மன்றம் அனுதாபத்தீர்மானங்களை நிறைவேற்றி எமது அனுதாபத்தையும் தெரிவித்தது.

இலக்கிய, கலைத்துறைகளில் புகழ் பெற்றவர்களைக் கௌரவிப்ப தென்று, எமது மன்றத்தின் தீர்மானத்திற்கு இசைய இம்முறை நாதஸ் வர மேதையான திரு. மு. பஞ்சாபிகேசன் அவர்களை மன்ற ஆண்டு நிறைவு விழாவில் பாராட்டிக் கௌரவிக்கின்றோம்.

எமது மன்றம் சிறந்த முறையில் பணியாற்ற பொது மக்களே பெரி தும் காரணமாவார்கள். விழாக்களுக்கு நிதி சேகரித்த போதும், நிதி உதவிப்படக்காட்சி காண்பித்தபோதும் பேராதரவு தந்த இலக்கியஉளங் கொண்ட அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள். மன்றத்தின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டிய போஷகர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

விழாக்காலங்களில் பலரும் பலவிதமான உதவிகளைச் செய்திருக்கின் றார்கள். அவர்களில் டிறிபேக் கல்லூரி அதிபர் J. V. தம்பிநாயகம் ஆசிரியர்கள் திரு. V. வேலுப்பிள்ளை, திரு. V. வயித்திலிங்கர், திரு. A. S. பாலரெட்ணம், திரு. P. தேவேந்திரன் திரு. மு. அருளானந்தம் ஆகியோர்கள் அன்பிற்குரியவர்கள்.

மேலும் மன்றம் சிறந்தமுறையில் செயல்பட உதவிய நிர்வாகசபை யினருக்கும் மன்ற உறுப்பினருக்கும் எனது நன்றிகள்.

அ. க. நாகராஜா
செயலாளர்

எமது வாழ்த்துக்கள்:

மயூரன் ஒடோமோபைல் என்ஜினியர்ஸ்

உரிமையாளர்: எஸ். திரவியம்

கண்டி வீதி சாவகச்சேரி

எமது நல்வாழ்த்து;

M. P. அஸீஸ் ரெயிலறிங்

மார்கட், சாவகச்சேரி.

பொருளாளர் அறிக்கை.

தென்மராட்சி இலக்கிய மன்றம் தனது முதலாண்டு நிறைவு விழாவை கொண்டாடும் வேளையில் கடந்ததகாலச் சேவையில் ஏற் பட்ட வரவு செலவு விபரங்களை பொது மக்கட்கு சமர்ப்பிக்க விரும்பு கின்றது.

வரவு;		செலவு:	
இலக்கிய விழா;			
நிதி சேகரிப்பு	— 269-00	விழாச் செலவு	— 274-35
நிகழ்ச்சி நிரல் விளம்பரம்	— 187-00	நிகழ்ச்சிநிரல் பதிப்பு	— 175-00
	456-00		449-35
கையிருப்பு	6-65		
சுத்தானந்தபாரதியார் வரவேற்புக் கூட்டம்:			
கையிருப்பு	6-65		
அங்கத்தவர் பணம்	41-90	கூட்டச் செலவு	— 48-55
	48-55		
பாரதி விழா:			
நிதி சேகரிப்பு	— 238-00	விழாச் செலவு	— 346-50
நிகழ்ச்சிநிரல் விளம்பரம்	— 50-00		
அங்கத்தவர் பணம்	— 58-50		
	346-50		

எமது மன்றம் நடாத்திய விழாக்களின் சிறப்பு அனைத்திற்கும் பொதுமக்கள் தந்துதவிய நிதியே ஆதாரமாக அமைந்தது. எனவே அவர்கட்கு மன்றத்தின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றேன். நிதியைச் சேகரிக்க உதவிய மன்றத்தைச் சேர்ந்த அனைவருக்கும் எனது நன்றிகள்.

ச. ஜீ. யேசுதாசன்
பொருளாளர்.

எமது வாழ்த்துக்கள்:

ஜோதி பிடவை நிலையம்

கண்டி வீதி — சாவகச்சேரி

திரு. நா. முத்தாலிங்கம்
(மன்ற ஒவியர்)

மலர் மணம் பரப்ப...

எமது மன்றத்தின் ஆண்டு விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் இம் மலர் மணம் பரப்பக் காரணமாக இருந்த அனைவர்க்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இம் மலரினை வாழ்த்தி வாழ்த்துச் செய்திகளைத் தந்துதவிய பெரியார்களுக்கு எமது நன்றிகள்.

மலருக்குக் கதை, சட்டுரை, கவிதைகள் தந்து உதவிய இலக்கியக் கலைஞர்கள் என்றும் நினைவிற்குரியவர்கள்.

விளம்பரம் தந்து உதவிய பெருமக்களுக்கு எமது உளங்கனிந்த நன்றிகள்.

மலரைச் சிறந்த முறையில் வெளியிட உதவிய செந்தில்ஸ் அச்சகத்தாருக்கு எமது பாராட்டுக்கள்.

— தென்மராட்சி இலக்கிய
மன்றத்தினர்.

Aleem Picture Palace

பலரக படங்கள்

பெல்ஜியம் கண்ணாடிகள்

நவீன பிறேம் வேலைகட்கு

விஜயம் செய்யுங்கள்

அலீம் பிக்ஸர் பலஸ்

202, கே. கே. எஸ். வீதி

யாழ்ப்பாணம்

கவர்ச்சி மிக்கது

RUDGE CYCLE

எல்லாம் உருக்கால்

செய்யப்பட்டது

RUDGE CYCLE

உழைப்பில் உயர்ந்தது

RUDGE CYCLE

இன்றே வாங்குங்கள்

RUDGE CYCLE

'றட்ஜ் சைக்கிள்'

Priya Cycle Palace

HOSPITAL ROAD

CHAVAKACHCHERI.

அ. ப. இல. 3652 ஆரம்பம்: 14-1-1922

விக்னேஸ்வர ஸ்ரோர்ஸ்

மார்க்கட் - சாவகச்சேரி

சி. க க. போட்டோ மார்க்

உயர்தர

'நல்லெண்ணெய்'

தயாரிப்பாளரும் வினியோகஸ்த்தர்களும்

சாப்பாட்டிற்கும் அதி விசேஷமான

நல்லெண்ணெய்.

இதரவிபரங்களுக்கு:

விக்னேஸ்வர ஸ்ரோர்ஸ்

4/3 முருகமூர்த்தி வீதி

யாழ்ப்பாணம்

முத்து ரெக்ஸ்ரைல்ஸ்

E.B. 2, மார்க்கட்

சாவகச்சேரி.

எல்லாவித

ரெடிமேட் உடுப்புகளும்

மற்றும்

பிடவை தினுசுகளும்

றெடிமேட் சேட்களும்

மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்

Muthu Textiles

E. B. 2, Market

CHAVAKACHCHERI

மலர்விழி

குடும்ப வார இதழ்

பிரதி சதம் 40

வருட சந்தா ரூபா 22-50

ஒவ்வொரு வாரமும் சிறுகதை, தொடர்கதை, சினிமாச் செய்திகள், கேள்விபதில், சிறுவர் பகுதி, பெண்கள் பகுதி, கைத்தொழில் விளக்கம், இன்னும் பலவும் சேர்ந்த ஓர் குடும்ப இதழ்

இன்றே வாங்குங்கள்

தமிழ்ப்பண்ணை புத்தக நிலையம்

193, K. K. S. ரோட் - யாழ்ப்பாணம்

கிளை: பஸ் நிலையம் - யாழ்ப்பாணம்

SPACE DONATED BY

U S H A

CHAVAKACHCHERI.

Branch Manager:

L. Thureswamy

சிறந்த

புகைப்படம்

புளொக்ஸ்

றபர்சீல்

தயாரிப்பாளர்

கொழும்பு ஸ்ரூடியோ

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 410

Space Donated By

Feeds Distributors

Kandy Road,

CHAVAKACHCHERI.

சேட் ஹவுஸ்

முன்னணிவகுக்கும் தையல் ஸ்தாபனம்

எங்களிடம்

L. S. S. பிடவைகளும் மற்றும்
பிடவைத் தினுசுகளும்,
சிறந்த முறையில் தைத்த
சோட்ஸ், சேட், கவுன் மற்றும் பல
வித றெடிமெட் சேட்டுக்களையும்
பெற்றுக்கொள்ளலாம்.

SHIRT HOUSE

A. C. Mohamed Rasaag
Leading Tailors & Textile Merchant
மார்க்கட், Market,
சாவகச்சேரி. Chavakachcheri.

ANANDAN ELECTRICAL.

Kandy Road,
CHAVAKACHCHERI.

18 மாத உத்தரவாதத்துடன்
எக்சைட் பற்றறியும்
யுவாசா பற்றறியும்
இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் பற்றறியை
இங்கே சார்ட்ச் (Carge) செய்து
கொடுக்கப்படும்.

ஆனந்தன் லெற்றிக்கல்

கண்டி வீதி
சாவகச்சேரி.

Space Donated By

Electronics

MAIN STREET

CHAVAKACHCHERI

கண்ணன் ஸ்ரோர்ஸ்

எங்களிடம்:

* தர்மிக்க ஓடுகள்
* அலுமினிய பாத்திரங்கள்
* நூல் வகைகள்
* மின்சார உபகரணங்கள்
* ப்டசாலை உபகரணங்கள்
* சூட்கேஸ் - றங் வகைகள்
* லற் றேடியோ பற்றறிகள்
* அழகுசாதனப் பொருட்கள்

முதலியவற்றை நியாய விலைக்குப்
பெற்றுக்கொள்ளலாம்.

கண்ணன் ஸ்ரோர்ஸ்

கண்டி வீதி, சாவகச்சேரி

திறமான தரமான படங்களை குறையாது திரையிடும்

சாவகச்சேரி - வேல் சினிமாவில்

1969 — 1970 ல் வெளிவர இருக்கும்
வெற்றிச் சித்திரங்களில் சில

- பறக்கும் பாவை — எம். ஜி. ஆர். சரோஜாதேவி
- சந்திரோதயம் — எம். ஜி. ஆர். ஜெயலலிதா
- பூவும் பொட்டும் — ரங்கராவ், பானுமதி, ஏ. வி. எம். ராஜன்
- ஊட்டிவரை உறவு — சிவாஜி, விஜயா, நாகேஷ்
- பாலாடை — சிவாஜி, பத்மினி, விஜயா
- அதே கண்கள் — ரவிச்சந்திரன், காஞ்சனா
- நெஞ்சிருக்கும்வரை — சிவாஜி, விஜயா
- பக்த பிரகலாதா — ரங்கராவ், அஞ்சலிதேவி, பாலமுரளிகிருஷ்ணா
- தில்லானாமோகனாம்பாள் — சிவாஜி, பத்மினி, நாகேஷ்
- கண்ணன் என் காதலன் — எம். ஜி. ஆர். ஜெயலலிதா

செந்தில்ஸ் அச்சகம் - சாவகச்சேரி